# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசர கூட்டம் 2018–ம் வருடம் ஜீன் மாதம் 04–ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

1) நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களால் 18–05–2018–ம் தேதியன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதின் படியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதன் படியும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் (Micro Compost centre) அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட மருந்துக் கோட்டை Compost Yard-ல் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் (4 TPD) அமைத்தல் மற்றும் பூங்காவில் சிறிய அளவிலான நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் அமைக்கும் பணிக்கு கீழ்காணும் விவரப்படி ரூ.54.00 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

## பணிகள் விபரம்

| வ.எண். | வேலையின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மருந்துக் கோட்டை பகுதியில் Micro Compost Centre அமைக்கும் பணி. | 47.00 |
| 2. | பத்மனாபபுரம் பூங்காவில் சிறிய அளவில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் அமையம் அமைக்கும் பணி. | 7.00 |
| | மொத்தம் | 54.00 |

மேலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி பொது நிதியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத

காரணத்தால் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நிதி வழங்க கேட்டு அதற்கான திருத்திய மதிப்பீட்டுப் பிரேரணையினை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண்.1275</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

**2)**நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் **18–05–2018–**ம் தேதியன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதின் படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதன் படியும் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட மருந்துக் கோட்டை உரக்கிடங்கில் குவிந்துள்ள பழைய குப்பைகளை அகற்றும் பணிக்கு (Bio Mining) ரூ.**64.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி பொது நிதியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நிதி வழங்க கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாகம் மண்டல இயக்குநர் வழியாக மதிப்பீட்டு பிரேரணை அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண்.1276</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

**3)** இந்நகராட்சி அலுவலகத்தில் அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தி வரும் Xerox machine பழுதடைந்துள்ளது. மேற்படி Xerox machine–ல் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொண்டும் உபயோக படுத்தாத நிலையில் உள்ளது. அதன்படி Xerox machine–வாங்குவதற்கு அரசாங்க இணையதள சந்தையின் (முன்பு உள்ள DGS விலை விகிதம்) மதிப்பு படி KYOCERA copier Model Task all for 220/with 7 feerures ரூ. **70,800/–** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி உபயோகபடுத்தாத நிலையில் உள்ள Xerox machine–ஐ ரூ.6000/–க்கு Exchange Mela-வில் எடுத்துக் கொள்ளலாம் எனவும் Hindusthan Auto Mechineries -ன் அங்கீகார விற்பனையாளர் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி Xerox Machine- க்கான மதிப்பு ரூ.70800–6000–64800–க்கு பதிலாக ரூ.62800/–க்கு வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அரசாங்க இணையதள சந்தை (GEM) மதிப்பின்படி ரூ.62,800/–க்கு Xerox Machine-வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 2980/2004/இ1.)

<u>**மன்றத் தீர்மானம் எண்.1277**</u>

அனுமதி வழங்கப்பட்டது.

4) அ)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ்கண்ட 3 பணிகளுக்கு

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பத்மனாபபுரம் கோட்டையில் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்தில் முதல் தளத்தில் நூலகம் கட்டுதல். | 10.00 |
| 2. | பத்மனாபபுரம் நகராட்சி உரக்கிடங்கில் பைரோலிசிஸ் ஆலை நிறுவுதல் . | 10.00 |
| 3. | பத்மனாபபுரம் நகராட்சி உரக்கிடங்கில் குப்பை பிரிக்கும் இயந்திரம் நிறுவுதல். | 5.00 |

மாவட்ட ஆட்சியர் (ம) பெருந்தலைவர் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை கடிதம் எண். ஆ3/5758/2017, நாள் 11–05–2018–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட 3 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆ)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ் கூடுதலாக ஒரு வேலையில் அதாவது சாரோடு ஜங்ஷனில் இருந்து வெட்டுக்காட்டு விளை முத்தாரம்மன் கோவில் வரை உள்ள வடிகாலுக்கு மேல் மூடி அமைக்கும் வேலையை ரூ.1,15,000/– மதிப்பீட்டில் எடுத்துச் செய்யவும், மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.

ஆ3/5758/2017 நாள் 11—05—2018—ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி பணியைச் செய்வதற்கும், ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 4230/2017/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1278</u>

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

5) பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017—18—ன் கீழ் கீழ்கண்ட 3 பணிகளுக்கு.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பத்மனாபபுரம் நகராட்சி 15—வது வார்டு ராமன்பறம்பு ஹிமாலயா தெருவில் அலங்கார ஓடுதளம் பதித்தல். | 1.50 |
| 2. | பத்மனாபபுரம் நகராட்சி 19—வது வார்டு பள்ளிக் கூடம் அருகே சமுதாயக் கூடம் அருகில் கழிவறை மற்றும் குளியலறை கட்டுதல். | 2.00 |
| 3. | பத்மனாபபுரம் நகராட்சி 3—வது வார்டு கோட்டை 2—வது தெரு முதல் பத்திரகாளியம்மன் கோவில் வரை அலங்கார ஓடு பதித்தல். | 3.00 |

மாவட்ட ஆட்சியர் (ம) பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை கடிதம் எண்.ஆ3/4230/2017, நாள் 11—05—2018—ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட 3 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 4230/2017/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1279</u>

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

6) இவ்வலுவலக பொதுபணி மேற்பார்வையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் வருவாய் ஆய்வரின் அறிக்கையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வார்டு எண்.10, கதவு எண்.24/3M எண் கொண்ட கட்டிடம் குடியிருப்பு பயன்பாட்டில் உள்ளதால் மேற்படி கதவு எண் உள்ள குடிநீர் இணைப்பு எண்.151/3291–ஐ வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பிலிருந்து வீட்டு உபயோக இணைப்பாக மாற்றம் செய்து வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.இ1/853/2017)

<u>**மன்றத் தீர்மானம் எண்.1280**</u>

அனுமதிக்கப்பட்டது.

7) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண். 11 நாள் 12–01–1999–ன் படி பத்மனாபபுரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் தொழில் ஸ்தாபனங்கள் மற்றும் பணியாளர்களின் அரையாண்டு தொழில்வரி கீழ் குறிப்பிட்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

| வ.எண். | அரையாண்டு வருமானம் | வரிதொகை ரூ. |
|---|---|---|
| 1. | ரூ.21000– வரை | – |
| 2. | ரூ.21001 முதல் ரூ.30000 வரை | 118/– |
| 3. | ரூ.30001 முதல் ரூ.45000 வரை | 298/– |
| 4. | ரூ.45001 முதல் ரூ.60000 வரை | 597/– |
| 5. | ரூ.60001 முதல் ரூ.75000 வரை | 883/– |
| 6. | ரூ.75001 –க்கு மேல் | 1173/– |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 21–05–2018–ம் தேதிய ந.க.எண்.12503/2018/ஆர்1, சுற்றறிக்கையின் அடிப்படையில் 01–10–2018 முதல் தொழில்வரி 25% வீதத்திற்கு குறையாமல் 35% விகிதத்திற்கு மிகாமல் 5 வருடத்திற்கு ஒருமுறை தொழில்வரி சீராய்வு செய்ய அறிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட தொழில் ஸ்தாபனங்கள் மற்றும் பணியாளர்களின் அரையாண்டு தொழில்வரி 01–10–2018 முதல் (2018–2019 இரண்டாவது அரையாண்டு) கீழ்காணும் விபரப்படி தொழில்வரி நிர்ணயம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. மேலும் இந்நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு அதிக பட்சம் 35% உயர்வு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | அரை வருட சராசரி வருமானம் | தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் தொழில்வரி ரூ. | 35 சதவீதம் உயர்வு ரூ. | 1–10–2018 முதல் நிர்ணயம் செய்யப்படும் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | ரூ.21000/–வரை | – | – | – |
| 2. | ரூ.21001 முதல் ரூ.30000 வரை | 118/– | 41/– | 159/– |
| 3. | ரூ.30001 முதல் ரூ.45000/– வரை | 298/– | 104/– | 402/– |
| 4. | ரூ.45001 முதல் 60000 வரை | 597/– | 209/– | 806/– |
| 5. | ரூ.60001 முதல் ரூ.75000/–வரை | 883/– | 309/– | 1192/– |
| 6. | ரூ.75001–க்கு மேல் | 1173/– | 411/– | அதிகபட்சம் 1250/– |

(ந.க.எண். 950/2018/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1281</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

8) இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையாளர் அறை, பொறியாளர் அறை (ம) கணணி அறையில் குளிரூட்டும் சாதனம் பொருத்துவதற்கு மதிப்பீடு ரூ.1.85 இலட்சம் (2018–19–ம் ஆண்டு பொதுப்பணி துறை தரக்கட்டுபாட்டு விலை விகிதத்தின்படி )தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குளிரூட்டும் சாதனம் கணனி அறையில் –2 எண்ணம் , பொறியாளர் மற்றும் ஆணையாளர் அறையில் தலா ஒன்று வீதம் ஆக மொத்தம் 4 எண்ணம் Voltas /0 General Brand வாங்கி பொருத்தவும் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 1028 /18/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1282</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

**9)** அ)இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு கொசுக்களால் பரவும் டெங்கு நோய்கள் வராமல் தடுக்கும் பொருட்டு வீடு வீடாக சென்று கண்காணிக்கவும், கொசுக்களின் வாழ்வாதாரங்களை அழிக்கவும் 8 தினக்கூலி பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் சுகாதார ஆய்வரின் குறிப்பின்படி ஏற்கனவே பணிபுரிந்து வரும் 8 தினக்கூலி பணியாளர்களை 01–05–2018 முதல் மேலும் 89 நாட்களுக்கு தொடர்ந்து பணியமர்த்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆ) ஒரு டெங்கு களப்பணியாளர் வாரத்தின் ஆறு நாட்களில் 30 வீடுகள் வீதம் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ள வேண்டும் என்று நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் 13 நபர்களுக்கு ஆறு நாட்களுக்கு 3900 வீடுகள் மட்டுமே பார்க்க இயலும். மேலும் இந்நகராட்சிக்குட்ட பகுதிகளில் 6685 வீடுகள் மற்றும் 15 தனியார் அரசு பள்ளிகள், அரசு அலுவலகங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் இதர தனியார் நிறுவனங்கள் உள்ளன.

எனவே நகராட்சி நிர்வாக ஆணையர்,நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) ஆகியோர்களின் அறிவுரையின் படியும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள கூடுதலாக 10 நபர்களை 01–07–2018 முதல் பணியமர்த்துவதற்கும் அதற்கான செலவு தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(3827/2015/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1283</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

**10)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு அனுமதி பெற்று நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளதை தினத் தந்தி நாளிதழில் 05–04–2018 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு ஆகும் செலவுத் தொகைரூ.13419/–ஐ M/s.அம்பாசிட்டா அட்வர்டைசிங் நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மற்றும் நகராட்சிக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பது சம்மந்தமாக மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு ஆகும் செலவுத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.509/2018/அ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1284</u>**

அனுமதிக்கப்பட்டது.

11)இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு அனுமதி பெற்று நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)ற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் எண்.33, நாள் 25–01–2018–ன் படி அறிவிக்கை செய்யப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 7234/2014/ஆர்1, நாள் 15–03–2018–ன் படி அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் தவிர்த்து சுய நிதி கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிக்க ஏதுவாக நகர் மன்ற தீர்மானம் எண்.1237, நாள் 31–04–2018–ன் படி மன்ற அனுமதி பெற்று தினத்தந்தி 05–04–2018–ம் தேதிய நாளிதழில் அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு (சுயநிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) 01–10–2017 (2017–2018 II அரையாண்டு முதல் ) சொத்துவரி நிர்ணயம் செய்ய ஆட்சேபனை ஏதேனும் இருந்தால் 30 தினங்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு பிரசுரிக்கப்பட்டது.

ஆனால் குறிப்பிட்ட தினங்களுக்குள் எந்தவித ஆட்சேபனையும் வரப்பெறவில்லை. எனவே அதனை உறுதி செய்து மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 509/2018/அ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1285</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

12) 2016–2017–ம் ஆண்டிற்கான ஆண்டு கணக்கு தயார் செய்து தணிக்கை நிறைவு பெற்றுள்ளதால் ஆண்டு கணக்கு தயார் செய்து வழங்கிய வகையில்
திரு. கருணாகரன் நாயர் என்பவருக்கு ரூ.30,000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1517/2015/பி1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1286</u>**

அனுமதிக்கப்பட்டது.

13) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 16–04–2018–ம் தேதிய உத்திரவு ந.க.எண். 257/2018/P1- படி இந்நகராட்சி ஆணையாளர் திரு. தே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் Engineering staff college of India, Hyderbad-32-ல் வைத்து 29–05–2018 முதல் 31–05–2018 முடிய நடைபெற்ற SBM – Integraed Capacity Building under CBUD Programme Capsule-1 பயிற்சியில் கலந்து கொண்டமைக்கான போக்குவரத்து படி (Travelling Allowance) ரூ. 9210/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

(ந.க.எண். சி1/1049/2018)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1287</u>**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

14) பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, காந்திநகர் பகுதிகளில் சாலைகள் குண்டு குழியுமாக இருப்பதால் வாகன போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறாக உள்ளது. மேற்படி சாலைகளை சீரமைப்பு செய்ய அப்பகுதி ஊர் பொது மக்களின் கோரிக்கையின் படியும், பொது மக்களின் நலன் கருதியும் பழுதான சாலைகளை தற்காலிக சீரமைப்பு (பேட்ச் ஒர்க்) செய்ய மதிப்பீடு ரூ.70,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. மேலும் மேற்படி பணிகளை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 797/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1288</u>**

மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

15)தமிழக அரசின் ஓராண்டு சாதனை மலர் குறித்து பத்மனாபபுரம் நகராட்சியில் 2016–17–ம் ஆண்டு திட்டப் பணிகளின் விபரம் நெல்லை மாலை முரசு நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் ரூ.14,700/–ஐ மேற்படி நெல்லை மாலை முரசு நாளிதழ் நிறுவனத்திற்கு பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.560/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1289</u>**

அனுமதிக்கப்பட்டது.

16)இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனமான பேட்டை சந்தைக்கு அருகில் உள்ள மீன் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு வேண்டி 6–வது முறையாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் எவரும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை. எனவே மேற்படி குத்தகை இனத்திற்கு பொறுப்புத் தொகை ரூ.50000/–எனவும், வங்கி உத்திரவாத சான்று ரூ.3,00,000/– என உள்ளதை ரூ.1,50,000/– எனவும் வங்கி உத்திரவாத சான்று கொடுக்க இயலாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ.1,50,000/– என இருப்பதை ரூ.50,000/– எனவும் குறைவு செய்து நிர்ணயம் செய்து மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1981/2017/அ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1290</u>**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

17) பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் பகிர்மான குழாய் (ம) மின் மோட்டார்கள் ஆகியவை பழுதடைந்து காணப்படுகிறது. மேலும் மேற்படி பகுதிகளில் வசிக்கும் பொது மக்களின் கோரிக்கையின்படி மேற்படி பகிர்மான குழாய் (ம) மின் மோட்டார்கள் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் விநியோக நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1077/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1291</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

ஒப்பம்/–
தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.